மத்தியிலே நான் இந்த அவையின்மூலமாகத் தெரிவித்துக்கொள்வது, நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைவிட கூடுதலாக எந்தப் பள்ளியாவது வசூலித்திருந்தால், சட்டத்திலே என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த வழிவகையின்படி அந்தப் பள்ளியின்மீது அரசு நிச்சயமாக நடவடிக்கையினை மேற்கொள்ளும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர். (குறுக்கீடு) இன்றைக்கு அவ்வளவுதான். எல்லாம் முடிந்துவிட்டது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உட்காருங்கள். திரு. பெ.சு.விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை 2009-2010 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஒன்பதாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

3. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010-2011 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 6-5-2010 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை பற்றிய மானியக் கோரிக்கை மற்றும் அதன்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்திற்கு பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.